யாழ்/உயரப்புலம் மெதடிஸ்மிசன்
தமிழ்க் கலவன் வித்தியாலயம்

Sujeevan

பரிசுத் தினம் -2012

காலம் :- 29.07.2012

நேரம் :- முற்பகல் 9.30 மணி

இடம் :- வித்தியாலய பிரதான மண்டபம்

தலைவர்

திரு.கு.திலீபன்

(வித்தியாலய முதல்வர்)

பிரதமவிருந்தினர்

உயர்திரு.இ.இளங்கோவன்

(கௌரவ ஆளுநரின் செயலாளர்,வடமாகாணம்)

சிறப்புவிருந்தினர்கள்

திரு.எஸ்.பிறேமானந்தசுந்தர்(லெனின்)

(பழைய மாணவன்)

திருமதி.சாந்தா.சுகிர்தரஞ்சன்

(பழைய மாணவி)

கௌரவவிருந்தினர்கள்

திரு.து.யோதிராசா

(பழைய மாணவன்)

திரு.சோ.ஜெயராசா

(பழைய மாணவன்)

பரிசில் வழங்குதல்

திருமதி.கிருபாஹரி இளங்கோவன்

நிகழ்ச்சிநிரல்

- விருந்தினர்களை வரவேற்றல்
- கொடியேற்றல்
- மங்கல விளக்கேற்றுதல்
- வரவேற்பு நடனம்
- வரவேற்புரை
- அதிபரின் பரிசுத்தின அறிக்கை
- பிரதம விருந்தினர் உரை
- பரிசில்கள் வழங்குதல்
- கலை நிகழ்வுகள்
- நன்றியுரை
- பாடசாலைக் கீதம்

ஆசிச்செய்தி

பரிசளிப்பு விழா சிறக்க நல்லாசிகள்...

உயரப்புலம் கிராம மக்களின் கல்வி வளர்ச்சியின் ஆதாரமாக விளங்கும் யா/உயரப்புலம் மெதடிஸ் மிசன் தமிழ் கலவன் வித்தியாலயம் இன்றைய தினம் தனது வருடாந்த பரிசளிப்பு விழாவைக் கொண்டாடுவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இன்றைய கணினி யுகத்திலே கல்வி அறிவின் முக்கித்துவத்தை எதனுடனும் ஒப்பிட முடியாது. "கல்வி இன்றேல் எதிர்காலம் இல்லை" ஒருபிரதேசத்தின் வளர்ச்சி, அந்தப் பிரதேசத்தின் பாடசாலைகளிலேயே தங்கியுள்ளது.

அந்த வகையிலே உயரப்புலம் மக்களின் வளர்ச்சியிலே இரண்டறக் கலந்துள்ள மெதடிஸ் மிசன் தமிழ் கலவன் வித்தியாலய பரிசளிப்பு விழாவிலே பரிசில்களைப் பெறவுள்ள மாணவச் செல்வங்களுக்கு எமது ஆலயம் சார்பான நல்லாசிகளை வழங்குவதுடன், பரிசளிப்பு விழா ஒரு வெற்றி விழாவாக அமைய பிடாரி அம்பாளின் நல்லாசிகளும் உரித்தாகுக.

பிரம்ம ஸ்ரீ சோ.முரளீதரசர்மா
ஆலய குரு,
ஸ்ரீவீரமாபிடாரி அம்பாள்தேவஸ்தானம்,
ஆனைக்கோட்டை.

ஆசிச்செய்தி

"உயர்வுக்குரிய அனைத்து சாதனைகளும்
ஊக்கத்தாலும் இதயபூர்வமாகவும் செய்யப்பட்டவையாகும்"

என்ற முன்னோர் வாக்கின்படி பாடசாலை சமூகம் சார்ந்த அனைவரது அர்ப்பணிப்புடனும் **யாழ்/ உயரப்புலம் மெதடிஸ்மிசன் தமிழ்க் கலவன் வித்தியாலயம்** காணும் மற்றுமொரு பரிசுத் தின இதழுக்கு ஆசியுரை நல்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

மேலே குறிப்பிட்டதின்படி பாடசாலையின் ஒவ்வொரு படிகளையும் திட்டமாக வகுத்து வழிநடாத்தி அதீத அர்பணிப்புடன் பாடசாலையை வெற்றிக்கு இட்டுச்சென்று கொண்டிருக்கும் அதிபர் திரு.கு.திலீபன் அவர்களது உழைப்புக்கு எனது கைகுலுக்கல்களை தெரிவிப்பதோடு அவரது தொடரும் பணிகளுக்கு இறைவன் அருள் புரிவராக.

மாணவ மாணவியரது கனவுகளுக்கு களம் அமைத்துக் கொடுத்து, அவர்களை பண்படுத்தி தொடர்ந்து பல சாதனைகள் படைக்க ஒத்துழைப்பு வழங்கும் ஆசிரியர் குழாமை வாழ்த்துவதோடு அவர்களது சேவைகள் பெருக கடவுள் துணை புரிவாராக.

அவ்விதமே அறிவு, ஆற்றல், என்ற பரந்த ஆழியில் கல்வி என்ற முத்தை நாடுவதை போலவே விளையாட்டுக்கள் துணைச்செயற்பாடுகள், வெளிக்கள செயற்பாடுகளிலும் மாணவர் நாட்டம் கொள்ள வேண்டும். அங்ஙனம் புதுயுகம் புனைய புறப்பட்டுக் கொண்டிருக்கும் மாணவர்களை வரவேற்று அவர்கள் தம் ஆற்றல் செழிக்க இறைவனை வேண்டுகிறேன்.

தனது பிள்ளைச் செல்வங்களை சான்றோர் எனக் கேட்க ஆவல் கொண்டு கல்வியில் வழிகாட்டுவதுடன் பாடசாலையின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக நிற்கும் பெற்றோர் மற்றும் பாடசாலை நிர்வாகத்தை சார்ந்த ஏனைய ஊழியர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

இதுவரை எட்டியுள்ள பாடசாலைச் செயற்பாடுகளின் வளர்ச்சி தொடரும் காலங்களில் கைகொடுக்கும் என ஆவல் கொள்வதோடு சமூகம் எதிபார்த்திருக்கும் நல்ல பிரஜைகளை உருவாகிட எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து ஆசிகூறுகிறேன்.

அருட்திரு· அன்ரனி சவரிமுத்து
தென் இந்திய திருச்சபை
கொக்குவில் மேற்கு

வித்தியாலய முதல்வரின் பரிசுத்தின அறிக்கை

- வணக்கத்திற்குரிய மதப்பெரியோர்களே!
- எமது அன்புக்கும் பெருமதிப்பிற்குமுரிய முதன்மை விருந்தினர் **உயர்திரு.இலட்சுமணன் இளங்கோவன்** அவர்களே!
- அவர்தம் பாரியார்,ஆசிரியப் பெருந்தகை திருமதி.கிருபாஹரி.இளங்கோவன் அவர்களே!
- எமது சிறப்பு விருந்தினர்கள் திரு.எஸ்.பிறேமானந்தசுந்தர் (லெனின்) அவர்களே!
  அவர்களின் உறவினர்களே!
  மற்றும் திருமதி.சாந்தா.சுகிர்தரஞ்சன் அவர்களே!
- கௌரவ விருந்தினர்கள் திரு.து.யோதிராசா, திரு.சோ.ஜெயராசா அவர்களே!
  அவர்களின் உறவினர்களே!
- கௌரவ ஆளுநரின் ஊடக இணைப்பாளர் திரு.கை.நந்தகுமார் அவர்களே!
- கோட்டக் கல்விப்பணிப்பாளர் அவர்களே!
- உதவிக் கல்விப்பணிப்பாளர்களே!
- சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களே!
- இப் பாடசாலையின் முன்னாள் அதிபர்களே, ஆசிரியர்களே!
- அபிவிருத்திக் குழு உறுப்பினர்களே!
- அபிவிருத்தி சங்க உறுப்பினர்களே!
- பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே!
- பழைய மாணவர்களே!
- அயற் பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே!
- நலன் விரும்பிகளே!
- பெற்றோர்களே!
- அன்புக்குரிய ஆசிரியர்களே!
- மாணவச் செல்வங்களே!

உங்கள் அனைவருக்கும் எமது அன்பார்ந்த வணக்கங்கள்

யா/ உயரப்புலம் மெதடிஸ் மிசன் தமிழ்க் கலவன் வித்தியாலயம் தனது பரிசளிப்புவிழாவிற்கு வருகை தந்த அனைவரையும் உள்ளத்தில் உவகையுடன் வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றது.

இப்பாடசாலையின் வரலாற்றில் மிக நீண்ட காலமாக பரிசளிப்பு விழா நடைபெறாத குறையை சென்றவருடம் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வானது நிறைவுசெய்தது. இதன் தொடர்ச்சியாக இந்த வருடமும் பரிசுத் தினம் நடைபெறுவதற்கு இறைவனின் அருளும் ஆசியும் எம்பக்கம் இருப்பதையிட்டு பெரு மகிழ்வடைகின்றோம்.

பெருமதிப்பிற்குரிய முதன்மை விருந்தினர் அவர்களே!

இன்றைய விழாவிற்கு உங்களது வருகை மேலும் பெருமை சேர்க்கின்றது. பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் தாங்கள் உத்வேகமிக்க நிர்வாக அதிகாரியாகவும், வடமாகாண கௌரவ ஆளுநரின் செயலாளராகவும் இரக்க சிந்தை மிக்க சமூகப் பணியாளனாகவும் கடமை புரிந்து கொண்டிருக்கின்றீர்கள். தாங்கள் இவ் விழாவிற்கு வருகை தந்திருப்பது எமது பாடசாலையின் வளர்ச்சியில் தங்களின் பங்கையும் பற்றையும் எடுத்துக்காட்டி நிற்கின்றது.

புங்குடுதீவில் பிறந்து ஆரம்பக் கல்வியை யா/புங்குடுதீவு ஸ்ரீகணேச வித்தியாலயத் தில் கற்று, இடைநிலை மற்றும் உயர்தர கல்வியை யா/இந்துக்கல்லூரியில் கற்று சித்தியடைந்து. B.Sc, M.Sc பட்டங்களை சென்னைப் பல்கலைக் கழகத்தில் கற்று குறைந்த வயதில் இலங்கை நிர்வாக சேவை திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து சிறந்த நிர்வாக சேவையாளனாக திகழ்கின்றீர்கள்.

வேலணை பிரதேச உதவி அரசாங்க அதிபராக, இளம் வயதிலேயே கடமையையேற்ற நீங்கள் பிறந்த ஊரிலேயே சேவை செய்யும் தலைமை அதிகாரியாக விளங்கியபேறு கிடைத்தற் கரியது, புனிதமானது. மக்களை தேடி நாடிச் சென்று சேவை செய்து புகழை நிலைநாட்டினீர்கள்.

நாட்டின் அசாதாரண ஆட்சிக்கால சூழ் நிலையில் உதவி அரசாங்க அதிபராகவும், பிரதேச செயலாளராகவும் கோப்பாய், நல்லூர், சங்கானை ஆகிய பிரதேசங்களில் மக்கள் மீது பாரபட்சமின்றி நியாயம் வழங்கி ஆய்ந்தோய்ந்து சிந்தித்து உதவிகள் புரிந்து பெருந்துணை புரிந்தீர்கள். குறிப்பாக ஏழை விவசாய மக்களுக்கு உடலையும் உயிரையும் பொருட்படுத்தாது அக்காலத்தில் ஆற்றிய இளம் அறிவின் திறனை என்னவென்று புகழ்வது!

1997 ஆம் ஆண்டு வடக்கு, கிழக்கு மாகாண சபையில் திட்டமிடல் பணிப்பாளராக விளங்கிய நீங்கள் அடிப்படையான குறிக்கோளிலிருந்து விலகாது பணியாற்றி சகலரதும் மனங்களையும் திருப்திப்படுத்தி சிறப்புற வழிப்படுத்தினீர்கள்.

தொடர்ந்து கிராம அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளராகக் கடமை யாற்றிப் பின்பு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராகவும், திறந்த உள்ளத்துடன் யோசனைகளை எடுத்துக் கூறியும் கடமைகளை வகுத்தும் மேற்கொண்ட பணியில் வெற்றியும் கொண்டீர்கள். மேலும் பொது நிர்வாக அமைச்சின் அதிஉயர் நிர்வாக சேவையின் செயலாளராக எல்லோராலும் மதிக்கப்பெற்றீர்கள்.

2005 ஆம் ஆண்டு வடகிழக்கு மாகாணசபை இரண்டாகப் பிரிக்கப்பட்டு நிர்வாக ஆட்சிமுறையில் மாற்றம் வந்தவேளை கல்வி, பண்பாடுகள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாள

ராகப் பதவி வகித்து இன்று வடமாகாண கௌரவ ஆளுநரின் செயலாளராக பதவி வகித்து வருகின்றீர்கள். தாங்கள் மேற்கொண்டுவரும் அரும்பணிகளால் மாணவர்கள் பெரும் நன்மையடைகிறார்கள். இனமத பேதமின்றி மாணவர் சேவையே மகத்தான சேவை என ஆற்றுகின்ற பொதுக் கொள்கையால் நாடு ஒற்றுமைப் பலம் பெறுகின்றது தமிழன் அறிவுப் பசிக்குப் பொருத்தமாக கல்வியை வழங்குவதற்காக உழைத்து வருகிறீர்கள்.

எமது பாடசாலையின் தேவையை கேட்டறிந்து வடக்கின் வசந்தம் நிதி உதவியின் ஊடாக 90X25 சதுர அடிப்பரப்பளவில் மாடிக்கட்டடம் நிர்மாணிப் பதற்கு வடமாகண கௌரவ ஆளுநர் மேஜர்.ஜெனரல்.ஜி.ஏ.சந்திரசிறி அவர்களுட னும் பாரம்பரிய கைத்தொழில் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு.கே.என்.டக்ளஸ்தேவானந்தா அவர்களு டனும் கலந்தாலோசித்து அவர்களின் வழிகாட்டலுடன் வடக்கின் வசந்த திட்டப்பணிப்பாளர் திரு.S.சிவகுமார் அவர்களுடன் கலந்துரையாடி தங்களால் அத்திவாரமிட்ட கட்டடம் இன்று பாடசாலையின் பல்வேறு தேவைகளை நிறைவேற்ற மிடுக்குடன் ஒங்கி நிற்பதற்கு காரண கர்த்தாவான தங்களை இன்றைய பொன்னாளில் பெரிதும் போற்றுகின்றோம். எமது அன்பான அழைப்பை ஏற்று பரிசளிப்பு உரையை நிகழ்த்தி எமது மாணவச் செல்வங்களுக்கு பரிசில் வழங்க வந்திருக்கும் தங்களை வருக! வருக! என பேருவகையோடு வரவேற்கின்றோம்.

திருமதி.கிருபாஹரி.இளங்கோவன் அவர்களே எங்கள் அழைப்பை ஏற்று வருகை தந்ததையிட்டு பெரு மகிழ்ச்சி கொள்கிறோம். தி/ஸ்ரீசண்முக மகளிர் இந்துக் கல்லூரியில் கல்வியை கற்ற பின் வவுனியா கல்வியற் கல்லூரியில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பயிற்சி நெறியை விருப்புடன் பயின்று ஆசிரியப் பணியை மேற்கொண்டு வருகிறீர்கள். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கலைமாணிப் பட்டத்தையும் பட்டபின் கல்வி டிப்ளோமா பயிற்சியையும் நிறைவு செய்து விழுமியப்பண்புகளையும் பெற்று பெருமையுடன் திகழ்கிறீர்கள்.

தங்களை போன்ற ஒரு பெண்மணியிடம் இருந்து பரிசில்களைப் பெறுவதால் எங்கள் மாணவர்கள் இரட்டிப்பு மகிழ்ச்சி யடைவார்கள். பாடசாலையில் நடாத்தப்படுகின்ற பரீட்சைகள் மற்றும் பொதுப்பரீட்சை பெறுபேறுகள், கோட்ட வலய மாவட்ட விளையாட்டுப் போட்டிகள் பொதுத்திறன் போட்டிகள் போன்ற எல்லா துறைகளிலும் வெற்றியையும் முதன்மை யையும் பெற்ற மாணவர்களுக்கு இன்றைய இப் பேரவையில் தாங்கள் பரிசில் வழங்கி கௌரவிப்பது பெருமகிழ்ச்சி அளிக்கின்றது.

தங்கள் கைகளால் வழங்கப்படுகின்ற பதக்கங்களையும், பரிசில்களையும் நன் மதிப்பிதழ்களையும் பெற்ற மாணவர்கள் பேருவகை அடைந்து அறிவூக்க முயற்சி களில் மேன்மேலும் ஈடுபட்டு கற்றலில் அதிக ஈடுபாடு கொண்டு மேன்மையடைவதோடு இந்நிகழ்வு ஏனைய மாணவருக்கும் ஊக்கத்தை கொடுத்து கற்றலில் ஆர்வம் ஏற்பட வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் திரு.எஸ்.பிறேமானந்தசுந்தர்(லெனின்) அவர்களே!

இப்பாடசாலையில் கல்வி கற்று லண்டனில் ஆசிரியப்பணியைதொடரும் தாங்கள் கல்வி கற்ற பாடசாலையை இன்றும் மறவாது

ரூபா ஒரு இலட்சம் பெறுமதியான பேரிகைக் கருவிகளை கொள்வனவு செய்து எமக்கு அன்பளிப்பாக வழங்கி யுள்ளீர்கள். இந்தநேரத்தில் உங்களுக்கு நன்றியைக் கூறி, உங்களின் உறவினர் களை வரவேற்று அவர்களுக்கும் நன்றி பாராட்டி தங்களைப் போன்ற பழைய மாணவர்களின் உதவி எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு என்றென்றும் அவசியம் என்பதை இந்நேரத்தில் வலியுறுத்தி நிற்கிறோம்.

சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் திருமதி.சாந்தா.சுகிர்தரஞ்சன் அவர்களே!

தாங்கள் புலம் பெயர்ந்து சென்றாலும் கல்விகற்ற பாடசாலையை மறவாது ரூபா ஒன்றரை இலட்சம் பெறுமதியான பிரதி எடுக்கும் இயந்திரத்தை (Photo CopyMechine) பெற்றுத்தருவதற்கு உறு துணையாக இருந்தீர்கள் தங்களுக்கும் இங்கிலாந்து வாழ் புலம்பெயர் உயரப்புலம் மெ.மி.த.க.வித்தியாலயம் பழைய மாணவ நண்பர்கள் சங்க உறுப்பினர்களான யாழினி.ஜெயகாந்தன், சிவஞானவதி.ஜீவரட்ணம், அமுதா.பெனடிற் ஆகியோருக்கும் ஏனைய இங்கிலாந்து வாழ் புலம்பெயர் பழையமாணவர் களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றி களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கௌரவ விருந்தினர் திரு.து.யோதிராசா அவர்களே!

1974 – 1978காலப்பகுதியில் ஆரம்ப க்கல்வியை இப் பாடசாலையில் கற்று இடைநிலைக்கல்வியை மானிப்பாய் இந்துக்கல்லூரியில் கற்று தற்போது ஜேர்மனியில் வசித்து வரும் தாங்கள் இன்றைய பரிசளிப்பு விழா சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு நல்கினீர்கள் உங்களின் உதவிகள் என்றென்றும் எங்கள் மாணவரின் கற்றல் செயற்பாடுகளுக்கு அவசியம் தேவை என்பதுடன் தங்களின் உதவிக்கு நன்றிபாராட்டுகின்றோம்.

கௌரவ விருந்தினர் திரு.து.ஜெயராசா அவர்களே!

இப்பாடசாலையில் ஆரம்ப இடைநிலைக் கல்வியைக் கற்று தற்போது பிரான்சில் வசித்து வரும் தாங்கள் கல்வி கற்ற பாடசாலையை மறவாது, தாமாகவே முன் வந்து விளையாட்டு உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கினீர்கள். அது மட்டுமல்லாது பாடசாலை தேவைகளையும் கேட்டறிந்ததுடன் தற்போதைய இவ் விழாவிற்கு உதவியும் புரிந்துள்ளனர். தங்களினதும் தங்களுடைய உறவினர் களினதும் உதவிகளுக்கு இச்சந்தர் ப்பத்தில் நன்றியைக் கூற கடமை பட்டுள்ளோம்.

வட மாகாண கௌரவ ஆளுனரின் ஊடக இணைப்பாளர்
திரு.கைலாயபிள்ளை.நந்தகுமார் அவர்களே!

எமது பாடசாலையின் வளர்ச்சிக்கான தேவைகளைக் கேட்டறிந்து உயர் அதிகாரிகளை இனங்கண்டு அவர்கள் மூலம் எமது பாடசாலைக்குப் பல உதவிகளைப் பெற்றுத்தந்த தங்களின் உதவிக்கு நன்றி கூறுவதுடன் இனி வரும் காலத்திலும் எமது பாடசாலையின் வளர்ச்சியில் கைகோர்த்து செயற்படுமாறு நாம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்விழாவிற்கு வருகை தந்திருக்கின்ற பிரதம விருந்தினர் திரு.இ.இளங்கோவன் அவர்களே! அவர் தம் பாரியார் திருமதி.கிருபாஹரி.இளங்கோவன் அவர்களே! சிறப்பு விருந்தினர் திரு.எஸ்.பிறேமானந்தசுந்தர் அவர்களின் உறவினர்களே!திருமதி.சாந்தா.சுகிர்தரஞ்சன் அவர்களே! கௌரவ விருந்தினர்களான திரு.து.யோதிராசா, திரு.சோ.ஜெயராசா ஆகியோரின் உறவினர்களே!

பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களே! பழைய மாணவர்களே! பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்களே! வெளிநாட்டில் இருந்து உதவி வழங்கிக் கொண்டிருக்கும் கல்வி அபிவிருத்திக் குழு உறுப்பினர்களே!

பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே! பெற்றோர்களே! அயற் பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே! நலன் விரும்பிகளே!

எமது பாடசாலையின் ஆசிரியர்களே! அன்புக்குரிய மாணவச் செல்வங்களே! இப்பொன்னான நன் நாளில் எமது அழைப்பையேற்று வருகை தந்த அனைவரையும் மீண்டும் ஒரு முறை வரவேற்று 2011 ஆண்டுவித்தியாலயத்தின் பரிசில் நாள் அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

எமது பாடசாலையான யா/ உயரப்புலம் மெதடிஸ் மிசன் தமிழ்க்கலவன் வித்தியாலயம் மிக நீண்ட ஓர் கல்விப் பாரம்பரியத்தைக் கொண்டது. இங்கு கற்கும் மாணவர்களில் பெரும்பாலானோர் பொருளாதார நலிவுற்ற குடும்பப் பின்னணியை உடையவர்கள். கற்றலுக்கு வறுமை ஒரு தடையல்ல என்ற மூத்தோரின் வாக்கிற்கு அமைய எமது பாடசாலையின் மகுட வாசகம் **"சிந்தனை விருட்சமாகுக"**என்பதாகும். சிந்தனையே மாணவரின் உள்ளக்கிடக்கைக் கிளறி தன்னைத் தானே உணரவைக்கின்றது. எமது பாடசாலையின் ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவரையும் நன்கு ஆராய்ந்து அவர்களுக்கு ஏற்றாற் போல் கல்வியை சிறந்த முறையில் கற்பித்து தேர்ச்சி நிலையை அடைய வைக்க கடும்முயற்சி செய்கின்றனர்.

பாடசாலையின் பாட அடைவுகளை அதிகரிக்கச் செய்வதற்கு கல்வி மேம்பாட்டுக்கான விசேட கற்றல் செயற்றிட்டங்கள், ஆசிரியரின் அர்ப் பணிப்பான சேவைகள் சிறந்த முகாமைத்துவக் கட்டமைப்பு, பாடத் திட்டமிடல், பாடமுன்னாயத்தம், தரமான உள்ளீடுகளின் உச்சப்பயன்பாடு, செய்முறையுடன் கூடிய கற்பித்தல், உள்ளக வெளியக மேற்பார்வை போன்றவை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. எண்ணும் எழுத்தும் கற்றலுக்கு மிக அவசியமானது என்பதை உணர்ந்து பாடசாலை நேரம் முடிவடைந்த பின்னரும் ஆசிரியர்களினால் பொருத்தமான பரிகாரக் கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது. மாணவர்களின் வகுப்பறை கற்றல் செயற்பாடுகள் மட்டுமல்லாது இணைப் பாடவிதான செயற்பாடுகளுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டு வருவது மாணவரின் மறைந்துள்ள ஆற்றல்களை வெளிக்கொணரும் என்பதில் ஐயமில்லை.

பௌதீக வளங்கள்

காணியும் கட்டடமும்

எமது பாடசாலைக் காணியின் விஷ்த்தீரணம் 0.83 ஏக்கர் ஆகும். இதில் கட்டடத் தொகுதி 668 சதுர மீற்றர் பரப்பில் அமைந்துள்ளது.வடக்கின் வசந்தம் நிதியின் மூலம் 90X25 அடி விஷ்த்தீரணத்தில் மாடிக் கட்டடம் கட்டிமுடிக்கப்பட்டிப்பது நீங்கள் அறிந்ததே இந் நேரத்தில் இக் கட்டம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வடமாகாண கௌரவ ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி அவர்களுடனும், கௌரவ அமைச்சர் கே.எஸ்.டக்ளஸ்தேவானந்த அவர்களுடனும் கலந்தாலோசித்து இக் கட்டடம் உருவாகுவதற்கு காரணகர்த் தாவாக இருந்த பிரதம விருந்தினருக்கு நன்றி கூறுகின்றோம்.

இதன் மூலம் கட்டடவசதியின்மை காரணமாக நெருக்கமாக காணப்பட்ட

வகுப்பறைகள் புதிய கட்டிடத்திற்கு மாற்றப்படுவதால் இதுவரை இருந்து வந்த நெருக்கடிகள் மண்டப பிராத்தனைக்கு ஒன்று கூடும் போது ஏற்பட்ட இட நெருக்கடிகளுக்கு தீர்வு ஏற்படும்.

ஆசிரியர்கள், மாணவர்களின் வாகனத் தரிப்பிடத்திற்கு பொருத்தமான இடம் தெரிவு செய்யப்பட்டு பாடசாலையின் தென்கிழக்கு மூலையில் நலன் விரும்பிகளின் நிதியுதவியுடன் ஓர் வாகனத்தரிப்பிடம் அமைக்கப்பட்டுள்ளது. அது போதுமானதாக இல்லாவிட்டாலும் உடனடித்தேவையைப் பூர்த்தி செய்வதாக உள்ளது.

எமது பாடசாலையின் தெற்கு, வடக்குப் பகுதியில் கம்பி வேலி அமைத்து உதவிய கல்விக் காருண்யன் E.S.P நாகரட்ணம் அவர்களுக்கு இந்நேரத்தில் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது பாடசாலையின் நீண்ட காலமாக மலசல கூடவசதி போதாமை பெரும் குறைபாடாக இருந்து வந்துள்ளது.

வடமாகாண கௌரவ ஆளுநர் மற்றும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சர் கௌரவ கே.எஸ்.டக்ளஸ்தேவனந்தா ஆகியோரின் ஆலோசனையுடன் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், பாடசாலைகள் வேலைகள் பகுதி பணிப்பாளர் திரு.S.குகணேசன் ஆகியோருடன் கலந்தாலோசித்து மேற்படிகுறைபாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டு வடமாகாண கலவித் திணைக்களத்தின் திருத்த நிதியில் இருந்து ரூபா 630,000 ஐ ஒதுக்கீடு செய்து உதவிய தற்போதைய வடமாகாண கௌரவ ஆளுநர் செயலாளர் திரு.இ.இளங்கோவன் ஆகிய தங்களுக்கு இந்நேரத்தில் எமது பாடசாலைச் சமூகம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குழாய் நீர் வழங்கல்

பாடசாலையின் குடிநீர் வழங்கும் குழாய்ப் பகுதிகள் தேவையான இடங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டு மாணவர்கள் சிரமமின்றி நீரைப் பெற குழாய்நீர் வழங்கல் வேலைகளை ரூபா 25000 இல் எமக்கு அமைத்து உதவியதுடன் எமது பாடசாலையின் சரஸ்வதி சிலையை மெருகூட்டி வர்ணப் பூச்சு வேலைகளும் செய்து அழகு படுத்திய டென்மார்க்கை சேர்ந்த நலன்விரும்பி திரு.மோகனகுமார் குடும்பத்திற்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முகாமைத்துவக் கட்டமைப்பு

திரு.கு.திலீபன் :- அதிபர்
திருமதி.சி.நந்தகுமார் :-பிரதி அதிபர்
திரு.செ.ஜெயகாந்தன் :- (பகுதித் தலைவர் ஆரம்பப்பிரிவு)
திருமதி.க.ஜெகதீஸ்வரன் :- பகுதித் தலைவர் (6-9)
திருமதி.தி.கணேசமூர்த்தி:- பகுதித்தலைவர் (10-11)

ஒழுகாற்றுக் குழு

திருமதி.சி.நந்தகுமார் :- பிரதி அதிபர்
திரு.நா.தவேந்திரராசா :- ஆசிரியர்
திரு.ஞா.காண்டீபன் :- ஆசிரியர்
திருமதி.தி.கணேசமூர்த்தி:-ஆசிரியர்
செல்வி.S.மரியஅஞ்சலா:- ஆசிரியர்

மதிய உணவுக் குழு

திரு.நா.தவேந்திரராசா :- ஆசிரியர்
திருமதி.M.F.சார்ள்ஸ் :- ஆசிரியர்
திருமதி.N.கருணாகரன் :- ஆசிரியர்
திரு.செ.ஜெயகாந்தன் :- ஆசிரியர்

விளையாட்டுக் குழு

திருமதி.சி.நந்தகுமார் :- பிரதி அதிபர்
திரு.செ.ஜெயகாந்தன் :- ஆசிரியர்
திரு.S.மகேந்திரராசா :- ஆசிரியர்
திரு.சு.தர்மரட்ணம் :-ஆசிரியர்
திருமதி.க.ஜெகதீஸ்வரன்- ஆசிரியர்

உள்ளக மேற்பார்வைக் குழு

திரு.கு.திலீபன் :- அதிபர்
திருமதி.சி.நந்தகுமார் :- பிரதி அதிபர்
திரு.செ.ஜெயகாந்தன் :- ஆசிரியர்
திருமதி.தி.கணேசமூர்த்தி :-ஆசிரியர்
திருமதி.க.ஜெகதீஸ்வரன்:-ஆசிரியர்

பாடசாலை அபிவிருத்திக் குழு

தலைவர் :- திரு.கு.திலீபன்
ஆசிரியர் :-திருமதி.சி.நந்தகுமார்
ஆசிரியர் :-திரு.செ.ஜெயகாந்தன்
ஆசிரியர் :-திருமதி.க.ஜெகதீஸ்வரன்
ஆசிரியர் :-திருமதி.தி.கணேசமூர்த்தி

பழைய மாணவர்.பிரதிநிதி

திரு.க.ஜெயச்சந்திரன்
திரு.கு.றஜீவன்
திருமதி.க.அருள்நாதன்

வலய பிரதிநிதிதிரு.இ.ரவீந்திரன்

பெற்றோர் பிரதிநிதி

திருமதி.க.அழகுராணி
திருமதி.நா.ராஜினி
திருமதி.பி.தங்கராணி

பாடசாலை அபிவிருத்தி சங்கம்

தலைவர் :- திரு.கு.திலீபன்
செயலாளர் :- சா.சுலோசனா தேவி
பொருளாளர் :- திரு.சி.மகேந்திரராஜா
உறுப்பினர்கள் :- ஞா.காண்டீபன்
சி.மாலதி
ஸ்ரீ.விஜயலக்சுமி
பி.தங்கராணி
கு.யோகராணி
சுமதி
ராஜி
நர்மதா

யா/ உயரப்புலம் மெதடிஸ் மிசன் தமிழ்க் கலவன் வித்தியாலயம் ஆசிரியர் குழாம்

இல	நிரந்தர ஆசிரியர்	பாடம்/ பொறுப்புகள்
1	திரு.கு.திலீபன்	அதிபர்
2	திருமதி.சி.நந்தகுமார்	பிரதி அதிபர்
3	திரு.இ.தர்மரட்ணம்	உடற்கல்வி
4	திருமதி.தி.கணேசமூர்த்தி	விஞ்ஞானம்
5	திருமதி.ந.தங்கராசா	சைவசமயம்
6	திருமதி.க.ஜெகதீஸ்வரன்	மனைப் பொருளியல்
7	செல்வி.சி.மாலதி	ஆரம்பக்கல்வி
8	திரு.செ.ஜெயகாந்தன்	ஆரம்பக்கல்வி
9	செல்வி.சூ.மரிய அஞ்சலா	ஆரம்பக்கல்வி
10	திரு.நா.தவேந்திரராசா	கணிதம்
11	திருமதி.மே.சாள்ஸ்	தமிழ்
12	திரு.சி.மகேந்திரராஜா	ஆரம்பக்கல்வி
13	திரு.ஞா.காண்டீபன்	ஆங்கிலம்
14	திருமதி.ம.குகன்	புவியியல்
15	திருமதி.நி.கருணாகரன்	சங்கீதம்
16	திரு.லோ.விஜேந்திரன்	விஞ்ஞானம்
17	திரு.க.கலியுகன்	நூலக ஆசிரியர்
18	திருமதி.சு.தவநாயகம்	வழிகாட்டலும் ஆலோசனையும்
19	செல்வி.இ.துசிதா	சித்திரம்
20	செல.வி.வா.ஜெனித்தா	ஆரம்பக்கல்வி
பகுதி நேர ஆசிரியர்கள்		
1.	திரு.P.ஸ்ரீபாலன்	விவசாயம்
2.	திரு.ச.சிவலிங்கம்	கணினி
3.	திருமதி.வ.கஜேந்திரன்	நடனம்
துணை ஆளணியினர்		
1.	செல்வி.தெ.யசிந்தா	கணினிபோதனாசிரியர்
2.	திரு.வே.தளையசிங்கம்	இரவுக் காவலாளி

இடமாற்றம் பெற்று எமது பாடசாலையில் இணைந்த ஆசிரியர்கள்.

திருமதி.ந.தங்கராசா :- சைவசமயம்
திரு.க.கலியுகன் :- நூலக ஆசிரியர்
திரு.லோ.விஜேந்திரன் :- விஞ்ஞானம்
திருமதி.சா.தவநாயகம் :- வழிகாட்டலும் ஆலோசனையும்

இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள்

திரு.சி.உமாச்சந்திரன்
திரு.ஞா.ஜஸ்ரின்மேரி
திருமதி.S.ரகுதாஸ் (தற்காலிக இணைப்பு)
திருமதி.க.சர்மிளா (தற்காலிக இணைப்பு)
திருமதி.ஜெ.மதுரா (தற்காலிக இணைப்பு)

மன்றங்களும் மன்றச் செயற்பாடுகளும்

தமிழ் மன்றம்

பொறுப்பாசிரியர்கள்

திருமதி.மே.சாள்ஸ்
திருமதி.க.ஜெகதீஸ்வரன்

தலைவர் :- செல்வன்.பா.சுகிர்தன்
செயலாளர் :- செல்வி.உ.ஈழப்பிரியா
பொருளாளர் :- செல்வன்.சா.கிருசாந்

எமது பாடசாலையில் கற்கும் மாணவர்களின் அடைவு மட்டத்தை மேம்படுத்தும் செயற்பாட்டின் ஒரு பகுதியாகவே தமிழ் மன்றம் நடைபெறுகின்றது. மாதாந்தம் நடைபெறும் தமிழ் மன்றத்தின் நிகழ்வுகள் மூலமாக மாணவர்களின் அறிவுவிருத்தி தன்னம்பிக்கை முன்வரும் ஆற்றல் மனமகிழ்ச்சி என்பன ஏற்படுகின்றன.

தவணைப்பரீட்சைகளில் தமிழ்பாடத்தில் கூடிய புள்ளிகள் பெறும் மாணவர்களுக்கு மன்றத்தினால் பரிசில்களும் வழங்கப்பட்டு மாணவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். இம்மன்றத்தின் பிறிதொரு செயற்பாடாகவே காலை நேரப் பிராத்தனையின் பின்பாக பத்திரிகை வாசிப்பு திருக்குறள் விளக்கம், நற்சிந்தனை ஆகிய நிகழ்வும் இடம் பெறுகின்றது. தமிழ் அறிவை வளர்ப்பதுடன் மாணவர்களின் மகிழ்ச்சி கரமான கற்றல் செயற்பாடுகளுக்கும் தமிழ்மன்றம் உதவி வருகின்றது. என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய ஒரு விடயமாகும்.

ஆங்கில மன்றம் (English Forum)

பொறுப்பாசிரியர்கள்

திரு.ஞா.காண்டீபன்
திருமதி.ம.குகன்

தலைவர் :- செல்வி.உ.ஈழப்பிரியா
செயலாளர் :- செல்வி.சொ.பகிதா
பொருளாளர் :- செல்வி.பொ.சுகந்தா

எமது பாடசாலையில் வருடம் தோறும் ஒவ்வொரு தவணைகளிலும் ஆங்கில மன்றம் நடைபெற்று வருகின்றது. இம் மன்றச் செயற்பாட்டினூடாக மாணவர்களின் தலைமைத்துவப் பண்பு வளர்க்கப்படு வதுடன் அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கான ஒரு செயற்பாடகவும் அமைகின்றது.

இம் மன்றத்தின் ஊடாக மாணவர் களது பேச்சுத் திறன் (Speaking skill) வாசிப்புத் திறன்(Reading skill) பொது அறிவு (General Knowledge) என்பன வளர்க்கப்படுகின்றது. மேலும் காலைப் பிராத்தனையின் போது செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில் மேற்கொள்ளப்படும் ஆங்கிலச் சொற்களை முன்வைத்தல் இம்மன்றத்தின் இதர செயற்பாடுகளில் ஒன்றாகும்.

மன்றச் செயற்பாட்டின் ஊடாக மாணவர் ஆங்கிலம் பேசுவதற்கு தயங்கிய நிலைமை மாறி எல்லா மாணவருக்கும்

சந்தர்ப்பம் கிடைக்கப் பெறுவதுடன் முக்கியமாக ஆங்கில பாடம் தொடர்பான அறிவிலும் முன்னேற்றம் ஏற்படுவதை நேரடியாக அவதானிக்க முடிகின்றமை பாராட்டுக்குரிய விடயமாகும்.

இந்து மன்றம்

பொறுப்பாசிரியர்கள்

திரு.தர்மரட்ணம்
திருமதி.ந.தங்கராசா

தலைவர் :- செல்வன்.த.டிலக்சன்
செயலாளர் :- செல்வி.சொ.பகிதா
பொருளாளர் :- செல்வன்.பி.ஜெனிஸ்ரன்

எமது பாடசாலையில் வருடம் தோறும் ஒவ்வொரு மாதத்திலும் முதல் வெள்ளிக்கிழமை இந்து மன்றக் கூட்டம் நடைபெற்று வருகின்றது. இதனூடாக மாணவர்களின் தலைமைத்துவப்பண்பு வளர்க்கப்படுவதுடன் மாணவர்களிடையேயுள்ள திறமைகளை வெளிக் கொண்டு வரவும் வாய்ப்பளிக்கின்றது அத்தோடு ஆசிரிய மாணவர் உறவு, விழுமியப்பண்புகள் என்பனவும் சிறப்படைகின்றது.

மேலும் மன்றத்தினூடாக ஒவ்வொரு வருடமும் நவராத்திரி விழா, சிவராத்திரி , குரு பூசைத் தினம் என்பனவும் நடைபெறுகின்றது. இதனால் மாணவரின் கற்றல் அடைவு மட்டத்திலும் முன்னேற்றத்தைக் காணமுடிகின்றது. 2011ம் ஆண்டு க.பொ.த. சா/த பரீட்சையில் மாணவர்கள் 100% சித்தி அடைந்தது குறிப்பிடத்தக்கதாகும். எதிர்வரும் காலங் களில் மேலும் அதிசிறப்பு சித்தி வீதத்தை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப் படுவது குறிப்பிடத்தக்கது.

கிறிஸ்தவ மன்றம்

பொறுப்பாசிரியர்கள்

செல்வி.இ.துஷிதா

தலைவர் :- செல்வி.வி.பிறின்சிலா
செயலாளர் :- செல்வி.க.சரணியா
பொருளாளர் :- செல்வன்.சி.இ.நிரோஜன்

எமது பாடசாலையில் கற்கும் மாணவர்களின் ஆன்மீக செயற்பாட்டின் ஒரு பகுதியாகவே இம் மன்றம் நடைபெறுகின்றது.

காலைப்பிரார்த்தனையைத் தொடர்ந்து மாதத்தில் முதல் வெள்ளி அன்று இம் மன்றம் நடாத்தப்படுகின்றது. இம் மன்றத்தில் மாணவர்களின் ஆன்மீக, ஒழுக்கம், சமயசம்பிரதாயம் தொடர்பாக அறிவை வளர்த்துக் கொள்வதுடன் மாணவர்களின் அறிவுத்திறன் தன்னம்பிக்கை முன்வரும் ஆற்றல் மனமகிழ்ச்சி என்பன ஏற்படுகின்றன. மாணவர்கள் வேதாகம வார்த்தைகளை மனனம் செய்யவும் தவணைப் பரீட்சையில் குறித்த தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளவும் பெரிதும் வழிவகுக்கின்றது.

இனிவரும் காலங்களில் மாணவர்களின் பின்னணிச் சூழல், ஒழுக்கசம்மந்தமாக நல்ல பெறுபேற்றினை பெறமுடியும் என இத்திட்டத்தின் மூலம் கொண்டு வர முடியும் என நம்புகின்றேன். எனவே மாணவர்களின் ஆன்மீக செயற்பாட்டிற்கு இம்மன்றம் பெரிதும் உதவியாக இருக்கும் என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

விஞ்ஞான – கணித மன்றம்
பொறுப்பாசிரியர்கள்

திருமதி.தி.கணேசமூர்த்தி (விஞ்ஞானம்)
திரு.நா.தவேந்திரராசா (கணிதம்)
திரு.லோ.விஜேந்திரன் (விஞ்ஞானம்)

தலைவர் :- செல்வன்.சா.கிருசாந்
செயலாளர் :- செல்வி.கு.கார்த்திகா
பொருளாளர் :- செல்வி.வி.வியான்சி

விஞ்ஞான மன்றத்தின் முக்கிய நோக்கம் மாணவர்கள் சூழலை நன்கு அவதானித்து உற்று நோக்கி ஐம்புலன்களையும் சரியான முறையில் பயன்படுத்தி ஓர் விஞ்ஞானி போன்று செயற்பட வழிகாட்டலாகும்.

மாணவர்களின் விஞ்ஞான – கணித தேர்ச்சி மட்டத்தை அடைவதற்கு பாடசாலை நேர கற்பித்தல் செயற்பாட்டுடன் மேலதிகமாக மாலை நேர, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. தரம் 8, 9, மாணவர்களுக்கு வானியற்பாசறை, கணிதப் பாசறைகள் நடைபெற்று செய்முறைகளினூடான கற்றல் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. மாணவர்கள் கணித – விஞ்ஞான கோட்டமட்ட, வலயமட்டப் போட்டிகளில் பங்குபற்ற வழிகாட்டப்படும் அதேவேளை 2011ம் ஆண்டு கோட்டமட்ட விஞ்ஞான புத்தாக்க கண்காட்சியில் பங்குபற்றிய செல்வி.க.சரணியா 3ம் இடத்தைப் பெற்று வலயமட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டது வரவேற்கத்தக்கது.

மாதாந்தம் நடைபெறும் விஞ்ஞான – கணித மன்றச் செயற்பாடுகளில் மாணவர்கள் மிகவும் உற்சாகத்துடன் பங்கு பற்றி தமது செயற்பாடுகளை முன்னெடுப்பது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். இதேவேளை மாணவர்களின் மறைந்திருக்கும் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிப்படுத்தும் களமாகவும் இது காணப்படுகின்றது.

தகவல் தொடர்பாடல் கழகம்

பொறுப்பாசிரியர்கள்

திரு.ச.சிவலிங்கம்
திரு.ஞா.காண்டீபன்

தலைவர் :- செல்வி.சொ.பகிதா
செயலாளர் :- செல்வி.உ.ஈழப்பிரியா
பொருளாளர் :- செல்வி.பொ.சுகந்தா

இன்றைய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் அசுரவளர்ச்சி காரணமாக எமது பாடசாலை மாணவர்களையும் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்தினுள் உள்ளீர்க்கும் தேவை உள்ளது. அதற்காக 10 கணனிகள்கொண்ட கணினி ஆய்வு கூடம் உருவாக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் தமது பாடநேரத்திலும், ஓய்வுநேரத்திலும் கணினி ஆய்வுகூடத்தைப் பயன்படுத்தி தமது கணனி அறிவை வளர்த்துக் கொள்கின்றனர்.

பாடசாலை தகவல் தொடர்பாடல் கழகம் மாதத்திற்கு ஒரு தடவை கூடுகின்றது. இங்கு மாணவர்களின் கணினி அறிவை மேம்படுத்துவதற்காக செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

இக் கணினிஆய்வுகூடம்ஆரம்பிக்கப்பட்டதன் பயனாக எமது மாணவர்களும் மாகாண கல்வித் திணைக்களம் நடத்தும் கணினி மென் பொருள் ஆக்கப் போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதில் பங்கு பற்றி பரிசில்கள், சான்றிதழ்கள் பெற வாழ்த்துகின்றேன்.

மாலை நேரத்தில் யாழ் வலய முறைசாராக் கல்விப் பிரிவின் அனுசரனையுடன் கணினி பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டு முறையாக நடைபெற்று வருகின்றன. இதற்காக நியமிக்கப்பட்ட

கணினி போதனாசிரியை செல்வி.தெ.யசிந்தா இப்பயிற்சி நெறியை திறன் பட நடாத்தி வருகின்றார். இதன் மூலம் எமது பாடசாலை மாணவர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

யாழ் கல்வித் திணைக்களத்தின் ஊடாக பல்லூடக எறியி(Multi media) ஒன்றும் கிடைக்கப் பெற்றுள்ளது. இதன் உதவியுடன் வானியல் பாசறை மாணவர்களுக்கான கருத்தரங்குகள் ஆசிரியர்களுக்கான பயிற்சி,கருத்தரங்கள நடாத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் எமது மாணவர்களின் கற்றல் தேர்ச்சிமட்டம் உயர்வடைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

எமது பாடசாலையின் இணையத்தளமுகவரி

web address –www.juv.sch.lk

எமது பாடசாலைக்குரிய இணையத்தள உதவியுடன் எமது பாடசாலை பற்றிய தகவல்களை உலகளாவிய ரீதியில் அறியவும் வெளிநாடுகளில் வதியும் புலம்பெயர் பழைய மாணவர்களுக் கிடையே பாடசாலை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் முடியும் என நம்புகின்றோம்.

சுகாதார மன்றம்

பொறுப்பாசிரியர்

திரு.இரா.தர்மரட்ணம்

தலைவர் :- செலவி.கு.குணதர்சிகா
செயலாளர் :- செல்வன்.மு.தரிசன்
பொருளாளர் :- செல்வன்.யோ.தர்சன்

எமது பாடசாலை சுகாதார மன்றத்தினூடாக பாடசாலைச் சுற்றுப்புற சுத்தத்தினைப் பேணுதல் மாதம் ஒருமுறை சிரமதானப்பணியை மேற்கொள்ளுதல் மலசலகூட சுத்தத்தினைப் பேணுதல். மாணவர் சுயசுத்தம், தினந்தோறும் காலை உடற்பயிற்சியில் மாணவர்களை ஈடுபடுத்தல் மாணவர் மத்தியில் சுகாதாரப் பழக்கவழக்கம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தல் சுகாதார சீர்கேட்டினால் ஏற்படும் தீமை பற்றியசெய்திகள், விளம்பரங்கள், சுவரொட்டிகளை ஒட்டி காட்சிப்படுத்தி அறிவுரை வழங்குதல்.

உடற்பயிற்சியின் ஊடாக விளையாட்டின் நுட்பங்களையும் விருத்தியடையச் செய்து பாடசாலை கோட்டம்,வலயம்,மாவட்ட மாகாண மட்ட போட்டிகளை பங்குபற்ற ஊக்கமளிப்பதுடன் உடல் உள சமூக சுகாதாரமிக்கவர்களாக மாணவர்களை உருவாக்குதல் சுகாதார மன்றத்தின் நோக்கமாகும்.

மாணவர்களுக்கு முதலுதவி பயிற்சியை வழங்கும் நோக்குடன் இலங்கை செஞ்சிலுவை சங்க உறுப்பினர்களின் உதவியுடன் முதலுதவி பாசறை மூலம் பயிற்ச்சிகள் வழங்கப்பட்டது ஒரு முக்கியமான விடயமாகும்.

கவின் கலை மன்றம்

பொறுப்பாசிரியர்கள்

திருமதி.சி.நந்தகுமார்

திருமதி.நி.கருணாகரன்

திருமதி.வ.கஜேந்திரன்

தலைவர் :- செல்வன்.ச.கிருஷாந்
செயலாளர் :- செல்வி.வி.பிறின்சிலா
பொருளாளர் :- செல்வன்.நா.சுதர்சன்

கவின் கலை மன்றம் மாணவர்கள் மகிழ்ச்சியான சூழலில் ஆடல் பாடல்கள் மூலம் தமது மனதில் காணப்படும் துன்பங்களை மறப்பதற்கு களமாக அமைகின்றது.

இதன் மூலம் மாணவர்களின் கலை ஆர்வம் இனம் காணப்பட்டு வளர்க்கப்பட்டு வருவது வரவேற்கப்படும் சிறப்பாகும் பாடசாலையில் நடைபெறும் பல்வேறு

நிகழ்வுகளில் இம் மன்றத்தின் செயற்பாடு மிக முக்கிய மானதாகும். ஆசிரியர் தின நிகழ்வுகளில் ஏனைய ஆசிரியர்களையும் இணைத்து பல்சுவை நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து மேடையேற்றி வருவது மாணவர்களிற்கு முன்னுதாரணமாகும்.

இம் மன்றத்தின் செயற்பாடுகள் இன்னும் விரிவடைந்து சென்று தமிழ்த் தினப் போட்டிகளிலும் பங்கு பற்றி வெற்றி பெற வாழ்த்துகின்றேன்.

பாடசாலைத் தேவைகள்

- ஒழுங்கமைந்த விளையாட்டு முற்றம்
- பாடசாலை மைதானம்
- விளையாட்டு உபகரணங்கள்
- பிரிக்கப்பட்ட வகுப்பறைகள்
- மனையியல் கூடம்
- நூலக வசதி
- நூலக புத்தகங்கள்
- ரோனியோ மிசின்

இதயம் கனிந்த நன்றி

எமது பாடசாலையின் இருப்பை வெளிப்படுத்துவற்கு இவ்வாறான விழாக்கள் பெரிதும் உதவுகின்றன. **"மாறிவரும் புதிய உலகத்தின் சவால்களை எதிர் கொள்ளும் வகையில் மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை விருத்தி செய்து சமூக இயைபாக்கமுடையவர்களாக வளர்த்தெடுத்து புதிய சமூதாயத்தை உருவாக்குதல்"** என்ற தூரநோக்கிற்கு அமைவாக எமது மாணவரின் கல்விச் செயற்பாடுகளைப் படிப்படியாக முன் நகர்த்திச் செல்கின்றோம். இந்த நடைமுறைக்காலமாற்றத்திற்கு காரணமான அன்புள்ளம் கொண்ட நீங்கள் ஒவ்வொருவரும் கொடுத்து வரும் பங்களிப்பும் ஒத்துழைப்புமே என்றால் மிகையாகாது.

இதன் வெளிப்பாடாக இன்றைய மகத்தான பரிசளிப்பு விழாவிற்கு முதன்மை விருந்தினராக வருகை தந்து மகிழ்வித்த வடமாகாண கௌரவ ஆளுநரின் செயலாளர் உயர்திரு.இ.இளங்கோவன் அவர்களுக்கும் அருட்கரங்களால் பரிசில் களை வழங்குவதற்காக வருகைதந்தி ருக்கும். திருமதி.கிருபாஹரி.இளங்கோவன் அவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றி களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிறப்பு விருந்தினராகவும், கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கும் புலம்பெயர் பழைய மாணவர்களுக்கும் பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவியும் ஒத்தாசையும் வழங்கிய பழைய மாணவ சங்கத்தினருக்கும், அபிவிருத்தி சங்கத்தினருக்கும் எமது பாடசாலையின் லண்டன் வாழ் புலம்பெயர்ந்த மாணவர்கள், தாங்கள் வாழும் இடத்தில் சங்கங்களை அண்மைக் காலத்தில் அமைத்து தாமாக முன்வந்து பெரு விருப்புடன் பாடசாலைக்கான தேவைகளை நிறை வேற்றி வருகின்றனர். அவர்கள் அனை வருக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது பாடசாலை மாணவி ஒருவர் மாகாணமட்ட விளையாட்டு நிகழ்வில் பங்குபற்றுவதற்கான தகுதியை பெற்றமை யை பத்திரிகை செய்தி வாயிலாக அறிந்து எமது வடமாகாண கௌரவ ஆளுநர் மேஜர்.ஜெனரல்.சந்திரசிறி அவர்கள் உடனடியாகவே உத்தரவிட்டதிற்கு இணங்க மாகாண கல்வி அபிவிருத்தி செயலாளர் திரு.சி.சத்தியசீலன் அவர்கள் மாணவர் இணைபாடவிதான செயற்பாடு களை மேலும் வளர்க்கும் நோக்கத்துடன்

ரூபா 15000.00 பெறுமதியான விளையாட்டு வீரருக்குரிய உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியிருந்தார். இச்சந்தர்ப்பத்தில் இருவருக்கும் நன்றியைக் கூற கடமைப் பட்டுள்ளோம்.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் ஊடாக தூர இடங்களிலிருந்து வருகின்ற பொருளாதார நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு எட்டு துவிச்சக்கர வண்டிகளை அன்பளிப்பாக வழங்கிய Save the children நிறுவன பொறுப்பதிகாரி திரு.S.மகேந்திரன் அவர்களுக்கும் நன்றியைத் கூறுகின்றோம்.

பாடசாலையில் கற்கும் எல்லா மாணவர்க்கும் குறித்த ஓர் பொருளாவது கிடைக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத் தோடு கற்றல் உபகரணங்களையும் பாதணிகளையும் வழங்கிய யாழ் எயிட் நிறுவனத்தினருக்கும் இந்நேரத்தில் நன்றிகளைக் கூறிக்கொள்கின்றோம்.

மேலும் எமது அழைப்பை ஏற்று வருகை தந்த கோட்டக்கல்விப்பணிப்பாளர், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் அயற் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் யாவருக்கும் எமது நன்றிகள்.

அதிபர்

பரிசில் தின நிகழ்விற்கு உதவியோர்.

அருட்.திரு.அன்ரனி.
சவரிமுத்து - 1000.00

அதிபர்,ஆசிரிய
நலன்புரிக் கழகம் - 8000.00

திரு.து.யோதிராசா - 25,000.00

திரு.சோ.ஜெயராசா - 15,000.00

பழைய மாணவர்கள்
க.பொ.த.(சா/த) – 2005 - 5000.00

பழைய மாணவர்கள்
க.பொ.த.(சா/த) - 2008 - 3000.00

பழைய மாணவர்கள்
சங்கம் - 10,000.00

பரிசில் பெறும் மாணவர் விபரம் - 2011

ஆரம்பக்கல்வி பரிசு பெறுபவர்கள்

தரம் - 1

செல்வி.பி.சதுஸ்ரலா

பாடங்கள் :- பொதுத்திறன், சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல்

தரம் - 2

செல்வன்.கு.தெபோராய்

பாடங்கள் :- பொதுத்திறன், தமிழ், கணிதம், சுற்றாடல்,

செல்வன்.அ.ஜெமீமா

பாடம் :- சமயம்

தரம் - 3

செல்வி.ற.றஞ்சிதா

பாடங்கள் :- பொதுத்திறன், தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம்.

தரம் - 4

செல்வி.இ.கிபேஸ்திகா

பாடங்கள் :- பொதுத்திறன், தமிழ், சமயம், சுற்றாடல், ஆங்கிலம்

செல்வி.இ.பேபி சாளினி

பாடம் :- கணிதம்

தரம் - 5

செல்வன்.வி.சயிந்தன்

பாடங்கள் :- பொதுத்திறன், தமிழ், சுற்றாடல், ஆங்கிலம்,

செல்வன்.யோ.சுவிந்தன்

பாடம் :- கணிதம்

செல்வி.து.ஜோதிகா

பாடம் :- சமயம்

இடைநிலைப்பிரிவு பரிசு பெறுபவர்கள்

தரம் - 6

செல்வி.செல்வரத்தினம்.சசிகலா

பாடங்கள் :- பொதுத்தகமை

தமிழ், சமயம், விஞ்ஞானம், ஆங்கிலம்,புவியியல்,

வரலாறு, குடியுரிமைக்கல்வி, சுகாதாரம், சங்கீதம்.

தரம் -7

செல்வி.உதயசந்திரன்.விதுஷா

பாடங்கள் :-பொதுத்தகமை

சமயம், தமிழ் விஞ்ஞானம், ஆங்கிலம்,புவியியல்,

வரலாறு, குடியுரிமைக்கல்வி,சங்கீதம், கணிதம்,

செயன்முறை தொழில் நுட்பம்.

செல்வன்.சந்திரகுமார்.சஞ்சீவன்

பாடங்கள் :- சுகாதாரம்

தரம் - 8

செல்வி.சொக்கலிங்கம்.பகிதா

பாடங்கள் :- பொதுத்தகமை

சமயம், தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு,

குடியுரிமைக்கல்வி,சங்கீதம், கணிதம்,சுகாதாரம்,

செயன்முறை தொழில் நுட்பம்.

புவியியல், குடியுரிமைக்கல்வி,

செல்வி.பொன்னுச்சாமி.சுகந்தா

பாடங்கள் :- ஆங்கிலம்

தரம் - 9

செல்வி.கஜந்தகுமார்.சரண்யா

பாடங்கள் :- விஞ்ஞானம்,சுகாதாரம், செயன்முறை தொழில் நுட்பம்,

சங்கீதம், குடியுரிமைக்கல்வி, ஆங்கிலம், கணிதம்,

செல்வன்.இராயேஸ்வரன்.நிறோஜன்

பாடங்கள் :- பொதுத்தகமை

சமயம், தமிழ்,புவியியல்,

செல்வன்.சாந்தகுணமூர்த்தி.கிருசாந்

பாடம் :- வரலாறு

தரம் - 10

செல்வி.உதயகுமார்.ஈழப்பிரியா

பாடங்கள் :- பொதுத்தகமை

சமயம், தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு,

கணிதம்,புவியியல், சங்கீதம், மனைப் பொருளியல்,

செல்வன்.பாலசிங்கம்.சுகிர்தன்

பாடம் :- விவசாயம்

தரம் - 11

செல்வன்.நாகாராசா.ஜெனிஸ்ரன்

பாடங்கள் :- பொதுத்தகமை

சமயம், தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம்,

விவசாயம், வர்த்தகம்

செல்வி.முத்துகுமார்.நளாயினி

பாடங்கள் :- வரலாறு, சங்கீதம், மனைப் பொருளியல், புவியியல்.

செல்வன்.தெய்வேந்திரம்.யனிஸ்ரன்

பாடம் :- சித்திரம்

க.பொ.த.(சா/த) – 2011 சிறந்த பெறுபேறு

செல்வன்.நாகாராசா.ஜெனிஸ்ரன்

பாடசாலையின் சாதனையாளர்கள்

இணை பாடவிதான சாதனையாளர்கள்				
மாணவர் பெயர்	நிகழ்ச்சி	கோட்டம்	வலயம்	மாவட்டம்
செல்வி.ஜெ.ஜெனார்த்தனி	800m ஓட்டம்	1ம் இடம்	2ம் இடம்	1ம் இடம்
	1500m ஓட்டம்	3ம் இடம்		
செல்வி.கு.நிரோசா	தடைதாண்டல்	1ம் இடம்	2ம் இடம்	
	400m ஓட்டம்	2ம் இடம்	1ம் இடம்	
செல்வன்.ந.ஜெனிஸ்ரன்	1500m ஓட்டம்	2ம் இடம்		
செல்வன். யோ.சுவிந்தன்	200m ஓட்டம்	3ம் இடம்		
பாடரீதியான சாதனையாளர்கள்				
செல்வி.க.சரணியா	விஞ்ஞான பாட கண்காட்சிக்குரிய ஆக்கப் போட்டி	3ம் இடம்		
செல்வி.கு.டனிசியா	சமூக விஞ்ஞானப் போட்டி	3ம் இடம்		
செல்வி.வி.பிறின்சிலா	Copy Writing	3ம் இடம்		

மாணவர் வரவு ஒழுங்கிற்கான பரிசில் விபரம் -2011

மாணவர் பெயர்	தரம்
பிரான்சிஸ்.சதுஸ்ரலா	தரம் - 1
விஜயகுமார்.நிதுஷன்	தரம் - 2
முத்துகுமார்.லக்சன்	தரம் - 3
ஜெயக்குமார்.கெனிஸ்ரன்	தரம் - 4
விஜயகுமார்.சஜித்தன்	தரம் - 5
குணசேகரம்.றஜீபன்	தரம் - 6
கஜந்தகுமார்.அஜித்	தரம் - 7
முத்துகுமார்.தரிசன்	தரம் - 8
சண்முகராசா.நிசாந்தன்	தரம் - 9
பிரான்சிஸ்.ஜெனிஸ்ரன்	தரம் - 9
குணநாயகம்.குணதர்சிகா	தரம் - 10
முத்துகுமார்.அகிலன்	தரம் - 11

பாடசாலைக் கீதம்

வாழ்க என்றும் வாழ்கவே
உயரப்புலம் மெதடிஸ்ட் மிஷன்
தமிழ்க் கலவன் வித்தியாலயம்

கனிந்த நல்ல பார்வையும்
கமலமென்ன வதனமும்
கடமை போற்றும் எண்ணமும்
மனதில் நல்லஉறுதியும்

உள்ளமெங்கும் இலட்சியம்
உயர்ந்த நோக்கத் திண்ணமும்
அள்ள அள்ளக் குறைவிலாத அறிவை
ஊற்றும் நிலையமாம்

அன்பினாலே ஆள வைக்கும்
அரிய சமயநீதியும்
இன்பவாழ்வு பொங்கும் வண்ணம்
இனியகலை விஞ்ஞானமும்

சிந்தைநாடும் சரித்திரம்
சிறந்த நுட்பநெறிகளும்
தந்தெமக்கு இன்பம் நல்கும்
இனிய கலைப்பீடமாம்

வாய்மை தூய்மை நியாயமும்
வாழ்வில் நீதிநேர்மையும்
பண்பொழுக்கம் அறிவுடன்
அன்பு தியாக சீலமும்

பொங்குமுடல் இளமைநலம்
உடற் பயிற்சியாவுமே
இங்கிதமாய் எம்களிக்கும்
இனிய வித்தியாலயமாம்.

பாடசாலைநிகழ்வுகளின் பதிவுகள் சில...

கலைநிகழ்வின் போது



பாடசாலையின் முகப்புத்தோற்றம்

மாணவர் விளையாட்டு
நிகழ்வின் அணிநடை



கல்விசுற்றுலாவின் போது

மாணவர்களின் சந்தை
செயற்பாட்டுநிகழ்வின்போது

மாணவமுதல்வர்களின் சத்தியபிரமாண
நிகழ்வின் போது